**O.S.No.268/2018**

**நாள் 01.08.2025**

**வா.சா.1 சின்னத்துரை**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எதற்காக இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் வெங்கடேஷ் என்பவருக்கு பணம் கொடுத்தது சம்பந்தமாக தாக்ல செய்துள்ளேன். பிரதிவாதியை எவ்வாறு தெரியும் என வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் தெரியும் என்று கூறியுள்ளேன் எவ்வாறு தெரியும் என கூறவில்லை. எனது முதல் விசாரணையிலும் பிரதிவாதியை எவ்வாறு தெரியும் என கூறவில்லை என்றால் சரிதான். எனது சொந்த ஊர் கருப்பனூத்து ஆகும். எனது தொழில் வழக்கறிஞர் ஆகும். நான் வழக்கறிஞராக 2008 ல் பதிவு செய்துள்ளேன். பணம் கொடுக்க வேண்டும் என எத்தனை பேர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் யார் மீதும் தாக்கல் செய்யவில்லை. 2016 ல் பணம் கொடுத்தற்கான வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் திருநெல்வேலியில் வழக்கறிஞராக பணியாற்றினேன். தற்போது நாங்குநேரி நீதிமன்றத்தில் வழக்கறிஞராக உள்ளேன். சங்கரன்கோவிலில் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கும் சங்கரன்கோவில் நகருக்கும் உள்ள உறவு குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் எனக்கு சங்கரன்கோவிலில் உறவினர்கள் உள்ளனர். பிரதிவாதிக்கு என்ன வயது இருக்கும் என்றால் 60 வயது இருக்கும். பிரதிவாதியின் தொழில் என்ன என்றால் ஈசன் ஸ்டோர் கடையில் இருந்தார். மேற்படி ஈசன் ஸ்டோர் பிரதிவாதிக்கு சொந்தமானதா என்பதுகுறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதி எவ்வளவு காலம் பழக்கம் என்றால் 2013–14 ல் பழக்கம். பிரதிவாதிக்கும் எனக்கும் எவ்வாறு பழக்கம் ஏற்பட்டது என்றால் வழக்கறிஞராக நான் சங்கரன்கோவிலில் பணியாற்றும்போது நான் மேற்படி கடைக்கு செல்லும்போது பழக்கம். மேற்படி ஈசன் ஸ்டோர் என்ன விதமான பொருட்கள் விற்க கூடிய இடம் என்றால் பேன்ஸி ஸ்டோர் ஆகும். பிரதிவாதியிடம் நான் பொருள் வாங்கும் வாடிக்கையாளர் என்ற முறையில் பழக்கமா என்றால் பொருள் வாங்க சென்ற போது பிரதிவாதியிடம் பழக்கம் ஏற்பட்டது. நான் வழக்கறிஞராக இருப்பதால் கடனுறுதி சீட்டை பொறுத்து பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான்.

2016 தேதியில் புரோநோட்டு ஏற்படுத்தப்பட்டது என்றாலும், வழககு தாக்கல்செய்யப்பட்டது 2018 என்றால் சரிதான். போதுமான கால அவகாசம் இருந்து வழக்கறிஞர் அறிவிப்பு ஏன் அனுப்பவில்லை என்றால் நான் எனது வழக்கறிஞரிடம் அறிவிப்பு அனுப்ப சொன்னேன். அவர் அனுப்பலாம், அனுப்பாமலும் இருக்கலாம். பிரதிவாதி எப்போது என்னிடம் பணம் கேட்டார், நான் எப்போது பணம் கொடுத்தேன் என்ற விவரம் வழக்கில் கூறவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். அவ்வாறு எந்தவிதமான விவரமும் பிராதிலும் முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நீதிமன்றத்தில் விவரம் கூறாமல் வழக்கை தாக்கல் செய்யாததால் வழககு நிலைநிறுத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பணம் கொடுத்தற்கு பிரதிவாதி எனக்கு காசோலை கொடுத்தார். மேற்படி காசோலையை வங்கியில் வசூலுக்காக செலுத்தும போது பணம் இல்லை என திருப்பி வந்துவிட்டது. அவ்வாறு எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றால் தேதி நினைவில்லை. அவ்வாறு எந்த ஆண்டில் காசோலை கொடுத்தார் என்றால் 2016 ம்ஆண்டு. அவ்வாறு எந்த தேதியில் எந்த வங்கி காசோலையை கொடுத்தார் என்றால் ஸ்டேட் பாங்க். நான் காசோலையை வசூலுக்காக எந்த வங்கியில் செலுத்தினேன் என்றால் நாங்குநேரி ஸ்டேட் பாங்க் கிளையில் பிரதிவாதி வங்கியில் பணம் இல்லை என வந்துவிட்டது. மேற்படி எந்த தேதியில் நாங்கு நேரி கிளைக்கு சென்றேன் என்றால் நியாபகம் இல்லை. அடுத்தவர்கள் வங்கி கணக்கை பணம் இருப்பதாக பார்ப்பது சட்டப்படிய நியாயமானது கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி காசோலையில் எவ்வளவு தொகைக்கு நிரப்பட்டிருந்தது என்றால் ரூ.1,70,000/-. மேற்படி காசோலை தாவா புரோநோட்டிற்கு தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாவா புரோநோட்டிற்கு காசோலை பெற்றதாக வழக்கில் கூறவில்லை. மேற்படி காசோலையை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் காசோலை தொலைந்துவிட்டது. தாவா புரோநோட்டிற்காக தான் ரூ.1,70,000/-க்கான காசோலையை பெற்றுவிட்டதால் தாவா புரோநோட்டு தன்மையை இழந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் காசோலையை வாங்கியிருந்தால் தாவா புரோநோட்டின் மதிப்பு அன்றைய தினமே இழந்துவிட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நான் யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல.

தாவா புரோநோட்டினை பிரதிவாதி எழுதிக்கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் பிரதிவாதியின் கையொப்பத்தை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் சாட்சியாக யார் உள்ளார்கள் என்றால் ந.கிருஷ்ணசாமி, எம்.கிருஷ்ணசாமி ஆகும். மேற்படி சாட்சிகள் இருவருக்கும் எந்த ஊர் என்றால் ஒருவருக்கு என்னுடைய ஊர் மற்றொருவருக்கு மேலசிவகாமியாபுரம் ஆகும். மேற்படி சாட்சிகளுக்கு சங்கரன்கோவில் நகரத்தில் எவ்வாறு பழக்கம் என்றால் மேற்படி முதல் சாட்சிக்கு வழக்கு நடைபெற்றது சம்பந்தமாக பழக்கம். 2 வது சாட்சி என்னுடைய பள்ளி தோழர். 2 வது சாட்சிக்கு என்ன தொழில் என்றால் புரோக்கராக உள்ளார் என்ன புரோக்கர் என்று தெரியாது. 2 வது சாட்சியின் நிரந்தர குடியிருப்பு எங்கு என்றால் NGO காலனி ஆகும். 2 வது சாட்சி மேலசிவகாமியாபுரம் என போட காரணம் என்ன என்றால் அப்போது அந்த ஊரில் குடியிருந்தார். சாட்சிகளுக்கு பிரதிவாதியை நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் கூப்பிட்டு போகும்போது தெரியும் அதற்கு முன்பு பிரதிவாதியை தெரியாது என்றால் சரிதான். தாவா புரோநோட்டு கருப்பனூத்தில் வைத்து எழுதப்பட்டது. தாவா புரோநோட்டில் white eraser செய்யப்பட்டு அதன் பிறகு எழுதப்பட்டடுள்ளது என்றால் முதலில் நெல்லை என்று எழுதப்பட்டது. நான் கூறும் நெல்லை வார்த்தை அவ்வளவு நீளம் White eraser ஆல் போடமுடியாது என்பதால் நான் கூறும் நெல்லை வார்த்தை தவறானது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டு எந்த நேரத்தில் எழுதப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. தாவா புரோநோட்டை நிரப்பியது யார் என்றால் மாரிமுத்துராஜ், மேற்படி மாரிமுத்துராஜ் எந்த ஊரைச்சார்ந்தவர் என்றால் வடக்கு பூலான்குளம் ஆகும். மேற்படி மாரிமுத்துராஜ் எவ்வாறு சொந்தம் என்றால் எனக்கு பள்ளி பருவ பழக்கம். நான் எனக்கு வேண்டிய நபர்களை வைத்து பிரதிவாதிக்கு வேண்டாத நபர்களின் தூண்டுதலினால் நான் தாவா புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் வா.சா–ஆ.1 புரோநோட்டோ, காசோலையோ பிரதிவாதி எனக்கு பிறப்பித்து கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் கண்ட தொகையை கொடுப்பதற்கு எனக்கு தகுதி கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னை நேரடியாக பார்த்தது கிடையாது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளரா என்றால் அதுகுறித்து தெரியவில்லை. நான் கூப்பிட்டதும் நேரடியாக வந்துவிட்டேன். தாவா புரோநோட்டு உண்யையானது கிடையாது என்றாலும பிரதிவாதியின் செலவு தொகையுடன் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மவி இல்லை.**